# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு ஜீன் 02ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரூர் இரயில் நிலையத்தில் இருந்து தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு வரை 40அடி அகலத்தில் புதிய இணைப்பு சாலை அமைக்க அரசாணை எண்.99 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (எம்.ஏ.3) நாள்.08.10.2018ல் சாலை அமைக்கும் பணிக்காக ரூ.18.00கோடி மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிக்காக ரூ.3.12கோடி என மொத்தம் ரூ.21.12கோடி மதிப்பீட்டில் செலவிடவும், மேலும் நிலம் கையகப்படுத்தும் பணிக்காக ஏற்படும் கூடுதல் தொகையினை நகராட்சி இதர திட்ட நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-5) துறை, நாள்.13.05.2020ல் கட்டடம் மற்றும் மரங்கள் உட்பட நிலம் கையகம் செய்யும் பணிக்கு ரூ.3,63,40,549/– (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது மட்டும்) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கோட்டாட்சியர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.அ1/1674/2020, நாள்.01.06.2020ம் கடிதத்தில் நிலம் கையகம் செய்ய கரூர் வருவாய் கோட்டாட்சியரை நிலம் கையகப்படுத்தும் அலுவலராக கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.சி2/11701/2018, நாள்.28.05.2020ல் உத்திரவிடப்பட்டுள்ளது என்றும் அரசாணையில் அணுகுசாலை அமைக்க கையகம் செய்யப்படும் நிலங்களுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.3,63,40,549/– (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது மட்டும்) நிலம் கையக பணியினை தொடங்க வேண்டி அரசு விதிகளின்படி கோரிக்கை துறையினர், நில கையக அலுவலருக்கு உத்தேச நில மதிப்பு தொகையினை வருவாய் கோட்டாட்சியர் பெயருக்கு காசோலை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்காக விளம்பரம், நாளிதழ் விளம்பரம் போன்ற சில்லரை செலவினங்களுக்காக முதல் தவணையாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வருவாய் கோட்டாட்சியர், கரூர் என்ற பெயருக்கு காசோலையாக வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை எண்.99 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (எம்.ஏ.3) நாள்.08.10.2018ன்படி இணைப்பு சாலைக்காக நிலம் கையகம் செய்யப்படும் பணிக்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3.12 கோடியினை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு காசோலையாக வழங்கவும், நிலம் கையகப்படுத்தும் பணிக்காக ஏற்படும் கூடுதல் தொகையினை அரசாணையின்படி நகராட்சி இதர திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மேலும் நில ஆர்ஜித பணிக்காக விளம்பரம், நாளிதழ் விளம்பரம் போன்ற சில்லறை செலவினங்களுக்காக ரூ.5,00,000/– நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு:–</u> மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/6963/2017)

தீர்மான எண்.2230 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சியுடன் இனாம்கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்து 48 வார்டுகளுடன் 53.26சதுரகி.மீட்டர் பரப்பளவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பெரு நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருகின்றது. நகராட்சியின் மக்கள் தொகை 2011–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 2,14,412 ஆகும். கரூர் நகராட்சி பகுதியானது மாவட்ட தலைநகரமாகவும், தொழில் நகரமாகவும் திகழ்ந்து வருகிறது. மேலும் கரூர் நகராட்சியானது மாநிலத்தின் மையப்பகுதியாக உள்ளதால் அனைத்து மாவட்டத்திலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்லும் நகரமாக உள்ளது. நகரில் 1236 எண்ணிக்கையிலான தெருக்கள் மற்றும் சாலைகள்

328.841கி.மீட்டர் அளவில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சிக்கு அருகில் உள்ள 5 ஊரக பஞ்சாயத்துகளின் மொத்த மக்கள் தொகை 49,859 ஆகும்.

கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பகுதிகளில் உள்ள 67436 குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அன்றாடம் நகரப்பகுதிக்குள் வந்து செல்லும் வெளியூர் பொதுமக்கள் மற்றும் இதர வணிக பயன்பாடுகள் ஆகியவற்றின் மூலம் தினந்தோறும் சராசரியாக 71மெட்ரிக் டன் சேகரமாகும் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளில் 41 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை பிரித்து நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரகிடங்கு மையங்களிலும், 24.50ஏக்கர் பரப்பளவில் உள்ள நகராட்சி சொந்தமான உரக்கிடங்கில் இயந்திரங்களுடன் அமைக்கப்பட்ட திடக்கழிவு செயலாக்க மையம் (Processing Unit) ஆகியவற்றின் மூலம் குப்பைகளை மறுசுழற்சி செய்யப்படுகிறது. மேலும் 20 மெட்ரிக் டன் மக்காத கழிவுகள் அழிப்பதற்கான அமைப்பு இல்லாத காரணத்தினால் அரியலூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படுவதால் நகராட்சியின் மூலம் அதிக செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

கரூர் நகராட்சிக்கு அருகில் உள்ள சின்னடாங்கோவில் கிழக்கு ஊராட்சி, சின்னடாங்கோவில் மேற்கு ஊராட்சி, காதப்பாறை ஊராட்சி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி மற்றும் ஆத்தூர் பூலாம்பாளையம் ஊரராட்சிகளையும் இத்திட்டத்தின் மூலம் சேர்ந்து செயல்படுத்த உள்ளன. அதன்படி 2011ம் ஆண்டு கணக்கீட்டின்படி 19,729 மக்கள் தொகை கொண்ட சின்னடாங்கோவில் கிழக்கு ஊராட்சியிலும், 6,038 மக்கள் தொகை கொண்ட சின்னடாங்கோவில் மேற்கு ஊராட்சியிலும், 9,875 மக்கள் தொகை கொண்ட காதப்பாறை ஊராட்சியிலும், 9,031 மக்கள் தொகை கொண்ட மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சியிலும் மற்றும் 5,186 மக்கள் தொகை கொண்ட ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சிகளையும் சேர்த்து ஆக மொத்தம் தினசரி சேகரமாகும் 5மெட்ரிக் டன் மக்காத திடக்கழிவுகளையும், நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் 20 மெட்ரிக் டன் மக்காத திடக்கழிவுகளையும் ஆக மொத்தம் 25 மெட்ரிக் டன் மக்காத திடக்கழிவுகளை நவீன முறையில் அப்புறபடுத்த 25 மெட்ரிக் டன் கொள்ளளவு நவீன எரியூட்டும் இயந்திரம் (INCINERATION PLANT) கரூர் நகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் சர்வே எண்.976ல் அமைந்துள்ள உரக்கிடங்கு பகுதியில் அமைப்பதற்கு ரூ.2.50கோடி மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட கருத்துருவிற்கு Design, Build, Operate and Transfer (DBOT) முறையில் நவீன எரியூட்டும் இயந்திரம் அமைப்பதற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி அளிக்கலாம் (இ1/1143 /2020)

தீர்மான எண்.2231 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சியானது வளர்ந்து வரும் பெருநகராட்சியாக உள்ளதால் தற்போது கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி ஆகிய பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி பணிகளின்போது சாலைகள் தோண்டப்பட்டு குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டதாலும், தற்போது வழங்கப்பட்டு வரும் புதைவடிகால் மற்றும் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகளில் முடிக்கப்பட்ட பகுதிகளில் சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் பழுதடைந்துள்ள சாலைகளை புதிதாக தார் சாலைகளாக அமைக்கவும், இச்சாலைகளில் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கவும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TNSUDP) 2020–2021ம் ஆண்டின்கீழ் ரூ.18.50கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விவரம் பின்வருமாறு

| வ எண் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்–1</u><br>வார்டு எண்.1 மற்றும் 2ல் உள்ள கோதை நகர் மெயின் ரோடு, குறுக்குத் தெரு, கே.பி. நகர் குறுக்கு தெரு, வடிவேல் நகர் மெயின் ரோடு, வடிவேல் நகர் குறுக்கு தெரு, திருக்காம்புலியூர் குறுக்குத் தெருக்கள் மற்றும் | 4.475 | 6.00<br>4.50<br>4.50<br>3.50<br>&<br>4.00 | 228.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருக்காம்புலியூர் மாரியம்மன் கோவில் ரோடு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | | | |
| 2 | <u>சிப்பம்–2</u><br>வார்டு எண்.3, 5, 6 மற்றும் 7ல் உள்ள எல்.ஜி.பி. நகர் கிழக்கு சாலை, இராமகிருஷ்ணபுரம், செங்குந்தபுரம், முத்து நகர் சாலைகள், திரு நகர் குறுக்கு தெருக்கள், கணேசா நகர், பாரதியார் தெரு, காமராஜர் தெரு, காயத்ரி நகர், பிள்ளையார் கோவில் தெரு, சின்னகுளத்துபாளையம், பெரியார் சாலை மற்றும் பிட்டர் பழனியப்பா தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.900 | 4.50<br>6.00<br>6.00<br>4.50<br>&<br>6.00 | **223.00** |
| 3 | <u>சிப்பம்–3</u><br>வார்டு எண்.7, 9, 11, 12, மற்றும் 14ல் உள்ள சிவானந்த தெரு, பிள்ளையார் கோவில் தெரு, திட்ட சாலை மெயின் ரோடு, மேற்கு தெரு, சோழன் நகர், பாரதியார் நகர், ஜீவா நகர், பாலகிருஷ்ணா நகர், கொங்கு நகர் மற்றும் குறுக்கு தெருக்கள், எஸ்.பி. காலனி குறுக்கு தெரு, என்.எஸ்.கே. மெயின் ரோடு மற்றும் கலைஞர் சாலை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.180 | 6.00<br>7.00<br>4.50<br>6.00<br>5.00<br>&<br>5.00 | 219.00 |
| 4 | <u>சிப்பம்–4</u><br>வார்டு எண்.17, 18, 20, 22, 23 மற்றும் 25ல் உள்ள இராமகிருஷ்ணபுரம் குறுக்கு தெருக்கள், செங்குந்தபுரம் குறுக்கு தெருக்கள், சின்னாண்டாங்கோவில் மெயின் ரோடு, பிரம்மதீர்த்தம் மெயின் ரோடு, லட்சுமிபுரம் வடக்கு மற்றும் தெற்கு, குருநாதன் தெரு மற்றும் மாவடியான் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3.920 | 6.00<br>5.00<br>7.00<br>7.00<br>6.50<br>&<br>5.00 | 235.00 |
| 5 | <u>சிப்பம்–5</u><br>வார்டு எண்.25, 27, 29, 30, மற்றும் 31ல் உள்ள முல்லா சாகிப் தெரு, கெந்தபொடிக்கார தெரு மற்றும் குறுக்கு தெருக்கள் மற்றும் பாரதியார் தெரு, கூத்தரிசிக்கார தெரு, குமரன் பள்ளி முதல் பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரை, பண்டரிநாதன் கோவில் தெரு, பாரதியார் குறுக்கு தெரு, திருமாநிலையூர் மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்கள், தாந்தோணி குடித் தெரு, அருணாசல நகர் 4வது, 5வது குறுக்கு தெருக்கள், அருணாசல நகர் விஸ்தரிப்பு சாலை, மற்றும் பசுபதிபாளையம் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 5.000 | 3.00<br>6.00<br>5.00<br>4.50<br>5.00<br>4.50<br>4.50<br>&<br>6.00 | 233.00 |
| 6 | <u>சிப்பம்–6</u><br>வார்டு எண்.33, 35, 36, 37 மற்றும் 38ல் உள்ள சணப்பிபிட்டி பள்ளி மெயின் ரோடு, சிலோன் காலனி ரோடு, நல்லப்பா நகர், ஏ.டி. காலனி, நரிகட்டியூர் கூசூழக்ஷ காலனி, எம்.ஆர். நகர் சாலை, ஆர்.ஏ. நகர் சாலை, கிருஷ்ணா நகர், முத்து நகர், ஜி.ஆர். நகர் சாலைகள், தெற்கு காந்திகிராமம் கூசூழக்ஷ குடியிருப்பு சாலை, கே.கே. நகர், சிவாஜி நகர் மெயின் ரோடு மற்றும் பழனியப்பா கார்டன் சாலை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத | 6.305 | 4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>& | 250.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | | 4.00 | |
| 7 | **சிப்பம்–7**<br>வார்டு எண்.39, 42, 43, 44, 46 மற்றும் 47ல் உள்ள சிவசக்தி நகர் 1, 2, 3ல் உள்ள குறுக்கு தெருக்கள் மற்றும் கிழக்குபகுதி சாலை, பழைய சுக்காலியூர் சாலை, கோடங்கிபட்டி முதல் ஈசநத்தம் மேற்கு சாலை வரை, சவுரிமுடி தெரு, பாரதிதாசன் நகர் குறுக்குத் தெருக்கள், காந்தி நகர் 1, 2, 3ல் உள்ள குறுக்கு தெருக்கள் மற்றும் காமராஜர் நகர் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 5.550 | 4.00<br>4.00<br>4.00<br>3.75<br>4.00<br>4.00<br>&<br>4.00 | 237.00 |
| 8 | **சிப்பம்–8**<br>வார்டு எண்.44, 45, 47 மற்றும் 48ல் உள்ள வெள்ளகவுண்டன் நகர் குறுக்கு தெருக்கள், வடக்கு தெரு மற்றும் குறுக்கு தெரு, முத்தலாடம்பட்டி முதல் பழைய எஸ்.பி. ஆபீஸ் சாலை வரை, விக்னேஸ்வரா நகர் மெயின் சாலை, விஜயாலம்மன் நகர் சாலை மற்றும் காளியப்பனுார் மேற்கு சாலை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 5.400 | 4.00<br>4.00<br>4.00<br>4.00<br>4.00<br>&<br>4.00 | 225.00 |
| | மொத்தம் | **39.730 கீ.மீ.,** | | **1850.00** |

மேற்படி பழுதடைந்த சாலையினை புதிதாக தார் சாலை அமைப்பதற்கும் மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.18.50கோடியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TNSUDP) 2020–2021ம் ஆண்டின்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/2396/2020)

தீர்மான எண்.2232 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சி எல்லைக்குள் இந்நகராட்சிக்கு சொந்தமான ஆசாத் சாலையில் வார்டு–1, பிளாக்–12, நகரளவு எண்.474, 475/2 மற்றும் 472/1 பகுதியில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் அலுவலகத்தின் கிழக்குப் பகுதியில் தென்வடலாக உள்ள வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு 124ஆண்டுகளுக்கு மேலாகின்றது. ஆய்வுக் கட்டிடம் 1979ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டபடியால் பழுதடைந்துள்ளது. தரை தளம் Madras terrace roofing மற்றும் முதல் தளம், தரை தளம் ஓடுகளை (Tiles roof) கொண்டு கூரை அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் பழுதடைந்துள்ளதால் அந்த கட்டிடத்தில் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி வகுப்பறைகள் ஏதும் நடைபெறுவதில்லை. ஆதலால் பயன்பாட்டில் இல்லாத வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் கரூர் வைஸ்யா வங்கி சமூக பங்களிப்பு நிதி (CSR FUND) மற்றும் பன்னாட்டு ரோட்டரி அறக்கட்டளை நிதியிலிருந்தும் கூடுதலாக தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டிடம் கட்டுவதற்காக நகர் ஊரமைப்பு துறையின் வடிவமைப்பு வரைபட ஒப்புதல் பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1598/2020)

தீர்மான எண்.2233 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள் பொது இடங்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்பு தூள் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக தொடர்ந்து செயல்படுத்திட 20 மெட்ரிக்டன் நீர்த்த சுண்ணாம்பு தூள் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள் பொது இடங்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய நீர்த்த சுண்ணாம்பு தூள் தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் 20 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் 20 மெட்ரிக் டன் நீர்த்த சுண்ணாம்பு தூள் கொள்முதல் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.50 லட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.2.50 லட்சத்தினை கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/1605/2020)

தீர்மான எண்.2234 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள அனைத்து கழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடம், பொது கழிப்பிடம், அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்யப்பட்டு வருகிறது, கிருமி நீக்கம் செய்ய பயன்படுத்தப்படும் லைசால் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக தொடர்ந்து செயல்படுத்திட லைசால் 5000 லிட்டர் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள கழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடம், பொது கழிப்பிடம், அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய லைசால் தெளிக்க தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் 5000 லிட்டர் லைசால் கொள்முதல் செய்ய தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் 5000 லிட்டர் லைசால் கொள்முதல் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.90 லட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.9.90 லட்சத்தினை கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/1605/2020)

தீர்மான எண்.2235 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள் பொது இடங்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய பயன்படுத்தப்படும் பிளீச்சிங் பவுடர் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக தொடர்ந்து செயல்படுத்திட 10 மெட்ரிக்டன் பிளீச்சிங் பவுடர் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள் பொது இடங்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய பிளீச்சிங் பவுடர் தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் 10 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் 10 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6.50 லட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.6.50 லட்சத்தினை கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2236 அனுமதிக்கப்பட்டது.

8) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–10/J1 நாள்.09.04.2020ல் நகராட்சிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரூர் நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தரும் அலுவலர்கள் அனைத்து பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள்அலுவலகத்தின் உள்ளே வரும் பொழுது கைகளை சுத்தம் செய்த பின்பு அலுவலத்திற்குள் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளதால் கை சுத்தம் செய்யும் கை சுத்திகரிப்பான் திரவம் (Hand Sanitizer) 500 மில்லி அளவு கொண்ட 100 எண்ணம், 200 மில்லி அளவு கொண்ட 500 எண்ணம் மற்றும் 5 லிட்டர் அளவு கொண்ட 10 எண்ணம் பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தரும் அலுவலர்கள் அனைத்து பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள்அலுவலகத்தின் உள்ளே வரும் பொழுது கைகளை சுத்தம் செய்த பின்பு அலுவலத்திற்குள் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளதால் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க கை சுத்தம் செய்யும் கை சுத்திகரிப்பான் திரவம் (Hand Sanitizer) 500 மில்லி அளவு கொண்ட 100 எண்ணம், 200 மில்லி அளவு கொண்ட 500 எண்ணம் மற்றும் 5 லிட்டர் அளவு கொண்ட 10 எண்ணம் கொள்முதல் செய்ய தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கை சுத்திகரிப்பான் திரவம் (Hand Sanitizer) 500 மில்லி அளவு கொண்ட 100 எண்ணம், 200 மில்லி அளவு கொண்ட 500 எண்ணம் மற்றும் 5 லிட்டர் அளவு கொண்ட 10 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.00 லட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.**3336**/ஜே**2**/**2020–8** நாள்.**02.04.2020**ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.**2.00** லட்சத்தினை கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.**2237** அனுமதிக்கப்பட்டது.

**9)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**48**ல் கரூர்–திண்டுக்கல் சாலை, தாந்தோணி கிராமம் புல எண்.**887**ல் வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவு (SPFW No.4169) மற்றும் புல எண்.**888**ல் வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு (SPFW No.1538) மற்றும் இடைப்பட்ட இடம் என மொத்தம் **378.0**மீட்டர் நீளம் உள்ள சாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி இடத்தில் வெங்கக்கல்பட்டி NH மேம்பாலம் சர்வீஸ் ரோடு தென்புறம் தார் சாலையிலிருந்து கிழக்கு ஏமூர் ஊராட்சி எல்லை வரை சுமார் **500**மீட்டருக்கு ஏமூர் ஊராட்சியின் மூலமாக சாலை அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் ஏமூர் அவர்களின் கடிதம் நாள்.**29.05.2020**ல் கோரப்பட்டுள்ளது.

ஆதலால் இந்நகராட்சிக்குட்பட்ட வெங்கக்கல்பட்டி NH மேம்பாலம் சர்வீஸ் ரோடு தென்புறம் தார்சாலையிலிருந்து கிழக்கு ஏமூர் ஊராட்சி எல்லை வரை உள்ள சுமார் **378.0**மீட்டருக்கு ஏமூர் ஊராட்சியின் மூலமாக சாலை அமைப்பதினால் இந்நகராட்சிக்கு செலவினம் ஏதும் இல்லாத காரணத்தினால் ஏமூர் ஊராட்சி மூலம் சாலை அமைத்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**நகராட்சிக்கு செலவின்றி ஏமூர் ஊராட்சி மன்றம் மூலம் சாலையினை அமைத்து கொள்ள தடையின்மைச் சான்று வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2270/2020)

தீர்மான எண்.**2238** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி